REGD.No. M. 6311 ★ தனி இதழ் 1 அணா ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் — ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The official organ of the D.P.F.

மலர் 3] சென்னை: ஆவணி 16உ வியாழன் (1—9—55) ★ ★ வெளியூர்: ஆவணி 17உ வெள்ளி (2—9—55) [இதழ் 68

நேரு சர்க்காரின் நிர்வாக இலட்சணம்!

கல்கத்தாவில் உள்ள இரு கட்டிடங்களை தபால்-தந்தி இலாகாவினர் உபயோகிக்காமலேயே 1952-ம் ஆண்டு இறுதி வரை ரூ. 4,60,000 வாடகையாகத் தந்திருப்பதாக பொதுக் கணக்கு விவரக் குழு தெரிவித்திருக்கின்றது. இந்தக் குழுவின் அறிக்கை மக்கள் சபையில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

அந்தக் கட்டிடங்கள் சரியாகப் பாதுகாக்கப்படாமலிருந்ததால் பாதையோரமாகக் குடியிருப்போர் அதில் சமீப காலம்வரை வாடகை இல்லாமல் குடியிருந்ததாகவும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

'முன் வைத்த காலை பின் வைக்கமாட்டோம்'

'தங்கச் சுரங்கத்தைத் தேசியமயமாக்கியே தீருவோம்'

'இப்பிரச்சினையில் பதவியைத் துறக்கவும் தயார்!

முதல் மந்திரி அனுமந்தையாவின் சூளுரை

இராபர்ட்சன்பேட்டை, ஆக. 30—

"தங்கச் சுரங்கங்களைத் தேசிய மயமாக்குவது என மைசூர் அரசாங்கம் கொண்ட முடிவிலிருந்து, எக்காரணத்தைக் கொண்டும் இனி பின்வாங்குவது என்பது கிடையாது; மைசூர் அரசாங்கத்தை, இந்தியாவில் உள்ள எந்த ஒரு அதிகாரமாவது புறக்கணித்து நடக்க முனையுமானால் அந்தப் பிரச்சினையின்மீது நான், என் பதவியைத் துறப்பேன்."

—இவ்வாறு, மைசூர் முதலமைச்சர் கே. அனுமந்தையா அவர்கள் சூளுரைத்துள்ளார்.

கோலார் தங்கச் சுரங்கங்களை தேசியமயமாக்குவது என்ற முடிவை மைசூர் அரசாங்கம் கொண்டிருக்கிறது. இம்முடிவில் இந்தியப் பேரரசிற்கு அவ்வளவாகத் திருப்தி இல்லை.

இப்பிரச்சினை குறித்து மக்கள் சபையில் கேட்கப்பட்ட கேள்வி ஒன்றுக்கு, இந்தியப் பேரரசின் சார்பில் கூறப்பட்ட பதில், தெளிவற்றதாக இருப்பதுடன், தங்கச் சுரங்கங்களை தேசியமயமாக்குவதை இந்தியப் பேரரசு விரும்பவில்லை எனப் பொருள் தரும்படியாகவும் இருக்கிறது. அதற்கு பதில் தரும் போக்கிலேயே, மைசூர் முதல் மந்திரி அனுமந்தையா மேற்கண்டவாறு சூளுரைத்திருக்கிறார்.

தங்கச் சுரங்கங்களில் பணி புரிந்துவரும் நிர்வாக அதிகாரிகள், தொழிலாளர்கள், வியாபாரிகள் சார்பில் ஒரு கூட்டம் நடைபெற்றது. அக்கூட்டத்தில் கலந்துகொண்டு பேசும்பொழுதுதான், அனுமந்தையா மேற்படி கருத்தைத் திட்டவட்டமாகக் கூறியுள்ளார்.

தங்கச் சுரங்கங்களை நிர்வகித்து வரும் தொழில் நிறுவனங்களின் பங்குதாரர்களுக்கு, நஷ்டஈடு தருவதை நிர்ணயிக்கும் உரிமை மைசூர் சட்டசபைக்கே இருக்கிறது என்றும், பங்குதாரர்கள் விஷயத்தில் சட்டசபையும் நியாயமாகவே நடந்துகொள்ளும் என்றும் முதல் மந்திரி விளக்கினார்.

தங்கச் சுரங்கங்களை தேசிய மயமாக்க முடிவு கட்டியதே, அவைகள் சீரான முறையில் செயல்படுவதற்கும், நாட்டின் நலன் ஒன்றை மட்டுமே கருதி பணியாற்றுவதற்குமேயாகும் என்றும், தேசிய மயமாக்கப்பட்ட பின்னரும்கூட, இப்போதுள்ள நிர்வாக அதிகாரிகள், உண்மையாக ஊழியம் செய்வார்களானால், அவர்கள் ஆங்கிலேயர்களாக இருந்தாலும், இந்தியர்களாக இருந்தாலும்—அவரவர்கள் செய்துவரும் பணியிலேயே தொடர்ந்து இருந்துவர அனுமதிக்கப்படுவர் என்றும் முதல் மந்திரி உறுதி கூறினார்.

[குறிப்பு:— கோலார் தங்கவயலை மைசூர் சர்க்கார் தேசிய மயமாக்குவதானால் அதற்கு பொருள் உதவி கூட இந்திய சர்க்கார் தரத்தயார் என்றும், ஆனால் பெரும் நஷ்டஈடு தந்து அந்தத் தொழிலை இப்போது தேசிய மயமாக்குவதனால், தொழிலை இலாபகரமாக நடத்த முடியுமா என்பதையும் எண்ணிப் பார்க்கவேண்டும் என்றும், மத்திய சர்க்கார் அண்மையில் தெரிவித்திருக்கின்றனர்]

கோவாவை விலைக்கு வாங்க..

ஐதராபாத் நிசாம் முயற்சித்தாராம்

லண்டன், ஆக. 30—

ஐதராபாத் நிசாம், கோவாவை போர்ச்சுகீசியரிடமிருந்து விலைக்கு வாங்க முயற்சித்த வரலாறு ஒன்று வெளியாகியுள்ளது.

'லண்டன் டைம்ஸ்' பத்திரிகைக்கு, சர். மீர்ஜா இஸ்மாயில் எழுதியுள்ள கடிதத்தில்; தாம் ஐதராபாத்தில் பிரதம மந்திரியாக இருந்தபோது, அது பற்றி பேரம் நடந்ததாகத் தெரிவித்திருக்கிறார்.

கோவா போர்ச்சுகீசியர் வசம் வெகுநாள் இருக்காதென்று சொல்லி, பிரிட்டிஷ் நண்பர்கள் மூலம் கோவாவை நிசாம் விலை பேசியதாக இஸ்மாயில் குறிப்பிட்டிருக்கிறார்.

கோவாவில் அரசு உரிமையை போர்ச்சுகீசியர் விடமுடியாதென்றும், கோவா துறைமுக நிர்வாகத்தில் வேண்டுமானால் நிசாம் சர்க்காருக்குப் பங்கு தருவதாகவும் கூறிவிட்டனராம்.

மைசூர் திட்டம்

ரூ. 250 கோடி மதிப்பு

பெங்களூர், ஆக. 31—

மைசூர் மாநிலத்தில் சுமார் ரூ. 250 கோடி மதிப்புக்கு இரண்டாம் திட்டம் இறுதியாகி வருகிறது என்று மாநில தொழில் மந்திரி சென்ன பாசப்பா தெரிவித்துள்ளார்.

எப்படி மனம் வரும்?

புதுடில்லி, ஆக. 31—

உத்தரப் பிரதேசத்திலும், பீகாரிலும் உள்ள சர்க்கரை ஆலைகளைத் தென்னாட்டிற்குக்கொண்டு செல்லும் எண்ணம் ஏதும் இல்லை என்று, ராஜ்யங்கள் சபையில் உணவு மந்திரி அஜீத் பிரசாத் ஜெயின் கூறியிருக்கிறார்.

சிந்திரி தரும் இலாபம்!

புதுடில்லி, ஆக. 31—

சர்க்கார் நடத்துகிற சிந்திரி இரசாயன உரத் தொழிற்சாலையிலிருந்து ரூ 1 கோடி வரையில் இலாபம் என்றும், அதற்காகும் நிர்வாகச் செலவு-படிகள் உட்பட ஒரு இலட்சம் ரூபாய்தான் என்றும் மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விமானிகள் வேலை நிறுத்தம்?

புதுடில்லி, ஆக. 31—

விமானிகள் வேலை நிறுத்தத்தில் ஈடுபடப்போவதாக 'இந்திய ஏர் லைன்ஸ் கார்ப்பொரேஷனு'க்கு யாதொரு அறிவிப்பும் கிடையாது என்று ராஜ்ய சபையில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

விமானிகள் கோரிக்கை அபரிமிதமாக இருப்பதாகவும், உதாரணமாக, விமானிகள், அடிப்படைச் சம்பளம் ரூ 750 கேட்பதாகவும், இது மிகவும் அதிகம் என்றும் இது ஏற்கக்கூடிய அளவு அல்ல என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

இந்திக் குழுவிற்கு ஆரம்பத்திலேயே அதிர்ச்சி

'பதினைந்தாண்டுத் தவணை மிகக் குறுகியதாகும்'

நீதிமன்றங்களில் இந்தி நுழைப்பு குறித்து எதிர்ப்பு

நாகபுரி, ஆக. 31—

15 ஆண்டு காலத்திற்குள் இந்தி மொழியை இந்தியப் பேரரசின் ஆட்சி மொழியாக ஆக்கிவிட வேண்டுமென இந்திய அரசியல் சட்டம் பணித்திருக்கிறது.

அதை, குறிப்பிட்ட காலவரையறைக்குள் எப்படி வெற்றிபெறச் செய்வது என்பதைக் கண்டறிய ஒரு குழு நியமிக்கப்பட்டு இருக்கிறது.

அக்குழுவும், ஒரு கேள்வித்தாளை வெளியிட்டிருக்கிறது.

அதற்கு, முதல் முதலாக அதிர்ச்சி ஏற்படும் வகையில் மத்தியப் பிரதேச உயர்நீதி மன்றம் பதில் கொடுத்திருக்கிறது.

"ஆங்கிலத்தை அகற்றி, அதற்கு பதிலாக இந்தியை நுழைக்க குறிப்பிடப்பட்டுள்ள பதினைந்தாண்டுக் காலம் மிகக் குறுகியதாகும்."

இப்படியாக நாகபுரி உயர் நீதிமன்றம், இந்திக் குழுவிற்கு அறிவித்திருப்பதாகத் தெரியவருகிறது.

மத்திய பிரதேசத்தில் உள்ள உயர்நீதி மன்றம் தவிர்த்து மற்ற நீதிமன்றங்கள் அனைத்திலும் குற்றப் பத்திரிகை, தீர்ப்பு ஆகிய இரண்டும் நீங்கலாக, மற்ற நடவடிக்கைகள் அனைத்தும் இந்தி மொழியிலாவது அல்லது மராத்தி மொழியிலாவது நடைபெற்று வருகின்றன. இந்த நடைமுறையும் கூட காலம் வருவதற்கு முன்பே மேற்கொள்ளப்பட்ட ஏற்பாடாகும் என உயர்நீதி மன்றம் கருதுவதாகத் தெரிய வருகிறது.

நீதித் துறையில், ஆட்சி மொழியான இந்தியை நுழைப்பதற்கு, தேவைப்படுவதான சட்ட நூல்கள், ஆய்வு நூல்கள், வழக்கு சட்ட நுணுக்க நூல்கள் முதலியன, முதல் முதலாக ஏராளமாக ஆக்கப்பட வேண்டும் என, இந்திக் குழுவிற்கு, உயர் நீதிமன்றம் வலியுறுத்தியுள்ளது.

எல்லாவற்றிலும் சிறப்பாக இந்தி மொழியில் சிந்தனா சக்தி வளருவதும் கட்டாயமாகும் எனவும், உயர் நீதிமன்றம் கருத்தறிவித்துள்ளது.

ஆச்சாரியாருக்கு அடிமேல் அடி!

பி. சி. ஜி. இயக்கம் பற்றிய இந்திய சர்க்கார் கொள்கை மாறாது!

புதுடில்லி, ஆக. 31—

"எவ்வளவு தீவிரமாக இயலுமோ அவ்வளவு தீவிரமாக, பி. சி. ஜி. ஊசி குத்தும் இயக்கத்தைத் தொடர்ந்து நடத்த வேண்டும் என்ற இந்திய சர்க்காரின் கொள்கையை எந்தக் காரணத்திற்காகவும் திருத்தியமைக்க வேண்டும் என்ற அவசியம் இருப்பதாக சர்க்கார் நினைக்கவில்லை,"

என்று, மத்திய சுகாதார இலாகா மந்திரி இராஜகுமாரி அமிர்த கௌரி மக்கள் சபையில் தெரிவித்திருக்கிறார்.

"பி. சி. ஜி. ஊசி, தீங்கற்ற மருந்து; அது நிச்சயமாக, காச நோய்த் தடுப்புக்கான ஆற்றல் கொண்டது; காசநோய் பரவுவதைத் தடுப்பதற்கு நம் கையிலிருக்கும் பலன் மிகுந்த ஆயுதமாகும் அந்த ஊசி,"

என்றும் அவர் தனது நீண்ட அறிக்கையில் குறிப்பிட்டிருக்கிறார்.

"பி. சி. ஜி. பற்றி அண்மையில் ஏற்பட்ட வாக்கு வாதங்களுக்குப் பின், அந்த இயக்கத்திற்கு தொடர்ந்த ஆதரவு இருந்து வருவது குறிப்பிடத் தகுந்தது; தெளிவில்லாதவர்களால் துவக்கப்பட்ட 'எதிர்ப்பு' கிலவும் சென்னையில்கூட, காலப் போக்கில், இந்த ஊசி குத்தும் இயக்கத்திற்கு மக்கள் ஒத்துழைப்புத் தருவர்,"

என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பக்கிங்காம் கால்வாய் அபிவிருத்தி

புதுடில்லி, ஆக. 31—

பக்கிங்காம் கால்வாய் அபிவிருத்திக்கான திட்டம் ஒன்றை திட்டக் குழுவிடம் தரும்படி சென்னை மாநில சர்க்காருக்குத் தெரிவிக்கப்பட்டிருப்பதாகவும், அத்திட்டத்திற்குப் பணம் ஒதுக்குவது பரிசீலிக்கப்பட்டு வருவதாகவும், மக்கள் சபையில் உதவி போக்குவரத்து மந்திரி ஓ. வி. அளகேசன் தெரிவித்திருக்கிறார்.

எல்லை வந்துவிட்டார்

காட்மண்டு, ஆக. 31—

நேபாளப் புரட்சித் தலைவர் டாக்டர் கே. ஐ. சிங், சீனாவிலிருந்து நேபாள திபெத்திய எல்லைக்கு வந்துவிட்டதாகத் தெரிகிறது.

'ஒரு அங்குல தமிழ் பூமியையும் விட்டுக்கொடுக்க மாட்டோம்'

நேசமணியின் பிரதாபம்!

"தேவிகுளம், பீர்மேடு, செய்யாற்றின்கரை பிரதேசங்கள் தாய்த் தமிழகமான சென்னையுடன் இணைக்கப்படாமல் போய்விடுமோ என்ற சந்தேகத்தால் அங்குள்ள மக்கள் திகைத்து வருகின்றனர்; அத்தகைய பீதிக்கு எந்தவிதமான ஆதாரமும் இல்லை."

"இங்கிருக்கும் தமிழ்ப் பிரதேசம் எங்கள் சொந்த பூமி; இதில் ஒரு அங்குல பூமியையும் நாங்கள் வேறு யாருக்கும் விட்டுக் கொடுக்கமாட்டோம் என்பது உறுதி; இந்த மாநிலத்திலுள்ள தமிழ் தாலுகாக்கள் அனைத்தும் தாய்த் தமிழகத்துடன் இணைக்கவே ஆகவேண்டும்; அதற்காக திரு-த. நா. காங்கிரஸ் எந்தவித தியாகத்திற்கும், எப்பொழுதும் தயாராகவே இருக்கிறது."

"எனவே, திருவிதாங்கூர் தமிழ் நாடு காங்கிரஸ், எந்த சூழ்நிலையிலும் தனது இலட்சியத்தை புனர்பரிசீலனை செய்யாது என்பதை நான் அழுத்தம் திருத்தமாக வற்புறுத்தம் செய்கிறேன்."

இவ்வாறு, தனது கொள்கையை விளக்கி திரு-த. நா. காங்கிரஸ் தலைவர் ஏ. நேசமணி எம். பி., பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளார்.

நம் நாடு
தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 1—9—'55 வியாழன்

தர்மபுரி தேர்தல்

மக்கள் சபைக்காக தர்மபுரியில் துணைத்தேர்தல் நடைபெற்று இருக்கிறது. அதில் நால்வர் போட்டியிட்டிருக்கின்றனர். நால்வருக்குமாகச் சேர்த்து மொத்தத்தில் சுமார் அறுபத்தோராயிரம் வாக்குகள் பதிவாகியுள்ளன.

அந்தத் தொகுதியில் மொத்தம் நான்கு லட்சம் முப்பத்தாறாயிரம் வாக்காளர்கள் உள்ளனர். அவர்களில் ஏறத்தாழ நான்கு லட்சம் வாக்காளர்கள் இத்துணைத் தேர்தலில் கலந்து கொள்ளாமலே இருந்துவிட்டுள்ளனர்.

துணைத் தேர்தலில் நான்கு லட்சம் வாக்காளர்கள் கலந்து கொள்ளாதது ஆச்சரியமானது மட்டுமல்ல; அது சிந்தனையைத் தூண்டக் கூடிய ஒரு முக்கிய அரசியல் சம்பவமுமாகும்.

அப்பகுதி வாக்காளர்களுக்குத் தேர்தல் நடைபெறுவது கூடத் தெரியாது. ஒரு வாக்காளர் கூட உள்நுழையாத பல தேர்தல் சாவடிகள் பணியாற்றி இருக்கின்றன.

வாக்குகளைப் பதிவு செய்ய காலை எட்டு மணிக்குத் துவங்கிய பெரும்பான்மையான தேர்தல் சாவடிகளில், இரண்டு மணி கழிந்த பிறகும் ஒரு வாக்குக்கூட பதிவு செய்யப்படாமலே இருந்திருக்கின்றன. வாக்குகள் பதிவான போக்கும் மிகமிக மந்தமாகவே இருந்திருக்கிறது.

மொத்தமுள்ள நாலேகால் இலட்சம் வாக்காளர்களில் ஒரு இலட்சம் வாக்காளர்கள் கூட இந்தத் துணைத் தேர்தலில் கலந்துகொள்ளவில்லை. இருந்தாலும் காங்கிரஸ் கட்சி பெற்றது வெற்றி என்றே கூறிக் கொள்ளப்படுகிறது. பிரம்மிப்படையத்தக்க மகத்தான வெற்றி!

இந்தத் துணைத் தேர்தலில் நாம் பெற வேண்டிய படிப்பினையை ஆராய்வதற்கு முன்பாக, இத்தேர்தல் ஏற்பட்டதற்கான காரணத்தை ஆராய்வது முக்கியம். 1952ம் ஆண்டு துவக்கத்தில் நடைபெற்ற மக்கள்சபைதேர்தலில் ஒழுங்கீனம் நடைபெற்றதாக வழக்காடப்பட்டிருக்கிறது. வழக்கை விசாரித்தத் தேர்தல் மன்றம், சமீபத்தில்தான், வெற்றி பெற்ற தோழர் சத்தியநாதனின் தேர்தல் செல்லாது என தீர்ப்பளித்து இருக்கிறது.

பொதுத் தேர்தல் நடைபெற்றது 1952-ம் ஆண்டுத் துவக்கத்தில் ஆகும். சரியாக மூன்றரை ஆண்டுக் காலம் கழித்துத் தேர்தல் மன்றம், தேர்தல் செல்லாது எனத் தீர்ப்பளித்து இருக்கிறது.

குறிப்பிட்ட ஒரு தேர்தலில், தேர்தல் விதிகளுக்குப் புறம்பாக ஒழுங்கீனம் நடைபெற்று இருக்கிறதா இல்லையா என்பதைக் கண்டறிந்து முடிவு கூற, மூன்றரை ஆண்டுக் காலம் தேவைப்பட்டிருக்கிறது— தேர்தல் மன்றத்திற்கு. தேர்தல் தீர்ப்பைக் கூறுவதில், அடுத்தத தேர்தல் வரையில் காலங் கடத்தாமல், தேர்தல் முடிவுற்ற மூன்றரையாண்டுக் காலத்திற்குள்ளாகவாவது தீர்ப்பளித்துவிட்டமைக்கு, நாம் தேர்தல் மன்றத்தின் ஆற்றலைப் பாராட்ட வேண்டியதுதான்!

நமது மக்களுடைய அரசியல் உணர்வின் தரம் எந்த வகையில் இருக்கிறது என்பதற்கு, தர்மபுரி துணைத் தேர்தல் ஒரு அளவு கோலாகும். அதைக்கொண்டு பார்க்குமிடத்து, நமது மக்களில் பெரும்பாலோர் இன்னமும் அரசியல் உணர்வு பெறாமலே இருக்கின்றனர் என்ற முடிவு கட்டவேண்டியதாக இருக்கிறது.

மக்களாட்சி முறையில் பொதுத் தேர்தலைக் காட்டிலும், ஒரு இடைத் தேர்தல் அதிகமான சிறப்பு வாய்ந்ததாகும். அதாவது பொதுத் தேர்தலில் கலந்துகொள்ளும் கட்சிகள், இயலக்கூடியதைக் காட்டிலும், செய்ய இயலாதவைகளை மிகைபடக் கூறி, பொது மக்களின் ஆதரவைப் பெற முயலுகின்றன. அப்பகட்டான பேச்சுகளில் மயங்கி பொது மக்களும் தங்கள் ஆதரவை அக்கட்சிகளுக்களிக்கின்றனர்.

பெரும்பாலான மக்கள் ஆதரவைப் பெற்று ஆட்சிப் பொறுப்பில் அமரும் கட்சி, தனது தேர்தல்கால வாக்குறுதிகளை நிறைவேற்றத் தவறும் பட்சத்தில், அந்தக் கட்சியைப் பதவியைவிட்டு வெளியேறச் சொல்ல மக்களுக்கு உரிமை கிடையாது. குறிப்பிட்டகாலம் வரும் வரையில், தங்களால் ஆட்சி பீடத்தில் ஏற்றப்பட்ட கட்சியின் அக்கிரமத்தைத் தடுக்க முடியாமல், வேடிக்கைப் பார்த்துக்கொண்டு இருப்பதுதான் மக்களின் பரிதாபநிலையாக இருந்து வருகிறது.

இப்பரிதாபகரமான குறைபாட்டைக் களையவும், ஆட்சிப் பொறுப்பில் உள்ளவர்களின் போக்கை மக்கள் வெறுக்கிறார்கள் என்பதைக் காட்டவும், துணைத் தேர்தல் ஒரு சிறந்த வழியாகும். ஆட்சியைக் கைப்பற்றிக் கொண்டிருப்பவர்களுக்கு, உண்மையில் மக்களாட்சி முறையில் ஆழ்ந்தப் பற்றும், மக்கள் விருப்பத்தை மதித்து நடக்கவேண்டும் என்பதில்கருத்தும் இருக்குமானால், துணைத் தேர்தல் முடிவை ஒரு பொருட்டாகக் கொண்டு, தங்கள் போக்கைத் திருத்தம் செய்துகொள்வதும் இயலக் கூடும்.

மக்களாட்சி முறை மலர்ந்து மணம் வீசிவரும் நாடுகளில், பொதுத் தேர்தலைப் போன்றே ஒரு இடைத் தேர்தலுக்கும் நானாவிதக் கட்சிகளும் அதிக முக்கியத்துவம் கொடுத்து வருவதற்கு, மேற் குறிப்பிட்ட உண்மையே காரணமாகும். கட்சிகளைப் போன்றே, வாக்காளர்கள் ஒவ்வொருவரும் இடைத்தேர்தலில் தீவிரமாகக் கலந்துகொண்டு, ஆட்சியாளர்களின் குறைவு நிறைவுகளை, தங்கள் தீர்ப்பின் மூலம் எடுத்துக் காட்டுவர்.

ஆனால் தர்மபுரி தேர்தல், அரசியல் கட்சிகளின் கருத்தையும் ஈர்க்கத் தவறி இருக்கிறது. வாக்காளர்களின் கவனத்தையும் கவரத் தவறி இருக்கிறது.

அரசியல் விழிப்புணர்வு மேலும் மேலும் மக்களுக்கு ஏற்பட வேண்டும். அந்த இறுதியை இலட்சியமாகக் கொண்டு அரசியல் கட்சிகள் அனைத்தும் இயங்கியாக வேண்டும். அந்தப் போக்கில்தான் நமது மக்களின் விமோசனம் அடங்கி இருக்கிறது.

அதுவும் அங்கே!

பீகாரில் தொழில் நுட்பக் கல்லூரி

பெருகும் தொழில்களைப் பேணி வளர்க்கவாம்!

ஐரோப்பாவின் ரூர் பிரதேசத்துக்கு இணையாக ஆசியாவின் ரூர் பிரதேசம் எனப் பேர்பெற்று விளங்கும் தாமோதர் பள்ளத்தாக்குப் பிரதேசத்தில், இந்தியா தனக்கு மிகத் தேவையான ஒரு பொருளை உற்பத்தி செய்து வருகிறது; அப்பொருள்தான் தொழில் நுட்ப அறிவு.

இப்பிரதேசத்தில் உள்ள பீகார் தொழில் நுட்பக் கல்லூரி, மாணவர்கள் தங்கிப் படிக்கும் இந்தியத் தொழில் நுட்பக் கல்லூரிகளுள் தலைசிறந்த ஒன்றாக விரைவில் வளர்ந்து வருகிறது; இதற்குக் கொழும்புத் திட்டமும், அமெரிக்க தொழில் நுட்ப ஒத்துழைப்புத் திட்டமும் உதவி செய்கின்றன.

இந்தத் தொழில் நுட்பக் கல்லூரி பீகார் மாநிலத்தின் ஆர்வமிக்க திட்டத்தால் அமைந்தது; அது ஆரம்பமாகி ஐந்தாண்டுகள் ஆகிறது. நாட்டில் பெருகும் உழவுக்கும், தொழிலுக்கும் மிகத் தேவையுள்ள உயர்தரத் தொழில் நுட்பக் கல்வி இந்நாட்டில் கிடைக்க வசதி செய்வதே இதன் நோக்கம்

இககல்லூரி, இன்னும் பிள்ளைப் பருவத்தில்தான் இருக்கிறது என்றாலும், 600 ஏக்கர் பரப்பளவுள்ள அந்த இடத்தில் பலகட்டடங்களும் தொழிற்கூடங்களும் விரைவில் தோன்றுகின்றன; இந்தியாவில் முன்பு எங்கும் கற்றுக் கொடுக்காத பாடங்களில் பட்டப் படிப்புக்கும், மேற்படிப்புக்கும், படிப்படியாய் வசதி ஏற்பட்டு வருகிறது இது; இணையற்ற தொழிற் கல்லூரி என்பதற்கு இவையே சான்றாகும் விரைவில் இது, பிற நாட்டாரும் கண்டு பாராட்டத்தக்க முறையில் விளங்கும்.

உடனே கிடைக்குமாம்!

பெங்களூர், ஆக. 30—

“சென்னை, பம்பாய், கல்கத்தா ஆகிய மாநிலங்களில் உள்ள சிறு ரகத் தொழில்களுக்குத் தேவைப்படும் இரும்பும், உருக்கும் கட்டுப்பாடு விலையில் உடனடியாகக் கிடைக்கும்,” என்று, சிறு ரகத் தொழில் போர்டு தலைவர் தெரிவித்துள்ளார்.

‘முதன்மை இடம்’ பெறும் மாநிலங்கள்!

புதுடில்லி, ஆக. 30—

கல்கத்தாவும் — சென்னையும் கைக்கடிகாரங்களைக் கள்ளத்தனமாகக் கடத்தும் நடவடிக்கைகளில் தலைமை கேந்திரமாக இருப்பதாக ராஜ்யங்கள் சபையில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்தியாவில் தற்போது மொத்தம் 32 மத்திய ஆராய்ச்சிக் கழகங்களும், ஆய்வுக் கூடங்களும் விவசாயத்துறை ஆராய்ச்சி வேலைகளில் ஈடுபட்டிருக்கின்றன.

வடக்கில் உருவாகும் வளமுள்ள திட்டம்

ரூ. 170 கோடி செலவில் அமையும் பக்ரா-நங்கல் அணைகளின் விவரம்

300 எஞ்சினீயர்கள்-8000 தொழிலாளர்கள் பணியாற்றும் பிரம்மாண்டமான சாதனம்

100 இலட்சம் ஏகரா நிலத்துக்கு (இந்தியாவின் மொத்த சாகுபடி நிலத்தில் ஐந்திலொரு பங்கு) பாசன வசதி ஏற்படுத்தி விவசாய உற்பத்தியையும், **4,00,000** கிலோவாட் மின்சார உற்பத்தி சக்தியால் தொழில்துறை உற்பத்தியையும் பெருவாரியாக அபிவிருத்தி செய்யும் பக்ரா-நங்கல் அணைக்கட்டுத் திட்டம் துவங்கப்பட்டு பத்து ஆண்டுகளாகின்றன.

சட்லெஜ் நதியின் உபரி தண்ணீரைத் தேக்கி பாசன—மின்சார உபயோகத்துக்குப் பயன்படுத்தும் இத்திட்டத்தால் பஞ்சாப், பெப்சு, இராஜஸ்தான் ஆகிய பிரதேசங்கள் பெரும் பயனடைகின்றன.

ரூ. 170 கோடியில் உருவாகும் இத்திட்டத்திற்கு உபயோகிக்கப்படும் காங்கிரீட்டின் முழு அளவையும் பயன்படுத்தினுல், கல்கத்தாவிலிருந்து நியூயார்க் வரையில் பாதை அமைத்து விடலாம்.

பக்ரா அணைதான் உலகிலேயே உயரம்மிக்க ‘பளு அழுத்த’ அணையாகும்; நங்கல் அணை, பக்ரா அணைக்கு சமன உறுப்பாக விளங்குகிறது-

எஞ்சினீயரிங் துறைக்கே ஒரு அரிய சாதனையாக விளங்கும் நங்கல் அணை 91 அடி உயரமுள்ளது; 1000 அடி நீளமுள்ளது.

அணைத் தண்ணீர் பாய்கிற கால்வாய்கள் வண்டல் படிந்து தூர்ந்து போகாமல் செய்வதற்காக விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன; தண்ணீர் மட்டத்துக்குக் கீழே 67 அடி ஆழத்தில் அமைக்கப்பட்டுள்ள விசேட கண்காணிப்பு மேடை அவைகளில் ஒன்றாகும்; அணையில் ஒழுக்கு ஏதாவது இருந்தால் உடனே கண்டுபிடித்து காங்கிரீட்டால் அடைப்பதற்கு அது வசதி செய்கிறது.

நங்கல் மின்சாரத் தண்ணீர் கால்வாய் மின்சார உற்பத்திக்கு உதவிய பின் பாசனத்துக்கு உதவுகிறது; 108 மைல் நீளமுள்ள அக்கால்வாய் முழுவதும் தளவரிசை உள்ளதாகும். உலகத்திலேயே இதுதான் மிகப்பெரிய தளவரிசைக் கால்வாய் 27 கோடி காங்கிரீட் தளவரிசைக் கற்கள் அதற்குத் தேவைப்பட்டன. அவ்வளவு கற்களையும் வரிசையாக அடுக்கினுல் உலகத்தையே இரண்டு சுற்றுச் சுற்றிவிடலாம்.

40 மைல் தூரத்துக்குப் பிறகு, இந்த நங்கல் கால்வாய்தான் பிரதான பக்ரா கால்வாயாக ஆகிவிடுகிறது. இத்திட்டத்தின் மொத்த கால்வாய்களின் நீளம் 690 மைல். கிளைக் கால்வாய்களின் நீளம் 2,790 மைல். இந்தக் கால்வாய்களையும், கிளைகளையும் அமைப்பதற்காக உச்சமாக 1,50,000 தொழிலாளர்கள் வேலை செய்திருக்கிறார்கள்.

பக்ரா அணையைக் கட்டுவதற்காக சுமார் 300 எஞ்சினீயர்களும், 8,000 தொழிலாளர்களும் வேலை செய்துவருகிறார்கள். பக்ரா அணை 680 அடி உயரமுள்ளது; சட்லெஜ் நதிப்படுகையில் அதன் நீளம் 300 அடி; அகலம் 625 அடி; உச்சியில் அதன் அகலம் 30 அடிதான்; ஆனால் நீளம் 1,700 அடி.

அணை கட்டுவதென்றால் சுலபமா? அதற்கு எவ்வளவு பூர்வாங்க வேலைகள் நடக்கவேண்டும்? தொழிலாளர்களையும், சாதனங்களையும் கொண்டுவருவதற்காக 8 மைல் நீள இரயில் பாதை கட்டப்பட்டிருக்கிறது; காரியாலயங்கள், நிர்மாண இயந்திர நிலையங்கள் யாவும் கட்டப்பட்டுள்ளன.

பக்ரா அணைக்கான அஸ்திவாரம் படுகை மட்டத்திலிருந்து 180-அடி ஆழம் வரையில் செல்கிறது. மண்ணையும், பாறையையும் அகழ்ந்தெடுக்கும் வேலை எல்லாம் இயந்திர சாதனங்களாலேயே நடத்தப்படுகிறது; இதுவரை 39,22,000-கன அடி பாறை தோண்டி எடுக்கப்பட்டிருக்கிறது.

, காங்கிரீட் தயாரிப்புக்காக ஒரு தனிப்பட்ட தொழிற்சாலையே ஏற்படுத்தப்பட்டிருக்கிறது; ஒரு மணிக்கு 400 டன் வீதம் அது காங்கிரீட் தயாரிக்கிறது. கட்டுமான வேலை தொடங்கியபின், பக்ரா அணைக்காக மணி ஒன்றுக்கு 400 டன் காங்கிரீட் வீதம் இடைவிடாமல் சுமார் நான்கு ஆண்டு காலத்துக்கு காங்கிரீட் கொட்டப்படும்; அந்த காங்கிரீட்டை உபயோகித்து கல்கத்தாவிலிருந்து நியூயார்க் வரையில் 20 அடி அகலமும் 3 அடி கனமுமுள்ள பாதை அமைக்கலாம்.

பக்ரா அணை 1959-ல் பூர்த்தியாகுமென்று எதிர்பார்க்கப்படுகிறது; இதற்கு ஏற்படக் கூடிய மொத்த செலவு ரூ. 170 கோடி; அதில் ரூ. 100 கோடி ஏற்கனவே செலவாகிவிட்டது.

கால்வாய்கள் மூலம் 3 இலட்சம் ஏகரா நிலத்துக்குச் சென்ற கோடையில் தண்ணீர் விடப்பட்டிருக்கிறது; இவ்வாண்டில் 10 இலட்சம் ஏகராவுக்குத் தண்ணீர் விடப்படும்.

கங்குவால் மின்சார நிலையம் வேலை துவங்கிய பின் பஞ்சாபிலுள்ள பல நகரங்களுக்கும் டில்லிக்கும் 24,000 கிலோவாட் மின்சார சக்தி விநியோகம் செய்யப்பட்டு வருகிறது.

நிலவுடைமைக்கு வரம்பு: உ. பி. எதிர்ப்பு!

இப்போதுள்ள நில உடைமைகளுக்கு உயர்ந்தபட்ச வரம்பு நிர்ணயிப்பதை உத்திரப் பிரதேசம் எதிர்ப்பதாக, மக்கள் சபையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தர்மபுரி உப-தேர்தல்

தர்மபுரி தொகுதி பாராளுமன்ற உப தேர்தல் 28—8—55ல் நடைபெற்றது. ஓமலூர் வட்டம் கொளத்தூர் சரகத்தில் கொளத்தூர், பண்ணவாடி, தாற்காடு, தாண்டா, குரும்பனூர், காவலாண்டியூர் ஆகிய 6 இடங்களில் ஓட்டுச் சாவடிகள் ஏற்படுத்தப் பட்டிருந்தது. கொளத்தூர் ஓட்டுச் சாவடியில் காலை முதல் மாலை வரை ஒருவர்கூட வாக்குப் பதிவு செய்யவில்லை. விசாரித்ததில், சென்ற தேர்தல் காலங்களில் மக்களுக்கு கொடுத்த வாக்குறுதிகளில் ஒன்று கூட நிறைவேற்றப்படவில்லை என்று அங்குள்ள மக்கள் குறைப்பட்டுக் கொள்கின்றனர் என்றும், அதனாலேயே, எவரும் வாக்குச் செய்யவில்லை என்றும் தெரிகிறது. மற்ற ஊர்களிலும் இதே காரணத்தினால் வாக்குப் பதிவுகள் நடைபெறவில்லையாம்.

குறிப்பு:—கொளத்தூர், தாண்டா, செட்டியூர் ஆகிய ஊர்களில் கிராம காங்கிரஸ் குழு இருந்தும், அக்குழுவினர் ஒருவர்கூட தேர்தலுக்கு வேலை செய்யவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ந. - கி.)

‘மற்ற நாட்டவரைப் போல நாமும் சீரான வாழ்வு பெறுவது எப்போது?’

சென்னை கூட்டத்தில் என். வி. நடராசன் முழக்கம்

30—8—55 மாலை 6½ மணி அளவில் சென்னை 8-வது வட்டம் பெத்துநாய்க்கன் பேட்டை திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகத்தின் முதலாண்டு விழா, தர்கா பௌண்டரிக்கு எதிரில், தோழர் சி. ஆர். பாலசுந்தரம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

கூட்டத் துவக்கத்தில் தோழர் இரா. சண்முகம், மற்றும் பல தோழர்கள் இயக்கப்பாடல்கள் பாடினர். கழகச் செயலாளர் தோழர் மு. ப. புட்பரத்தினம் ஆண்டறிக்கை வாசித்தார்.

பின்னர் தோழர்கள் பா. நடராசன், சோமசுந்தரம், பன்மொழியன் ஆகியோர் பேசினர்.

பின்னர், தோழர் போளூர் சுப்பிரமணியம் அவர்கள், திருவள்ளுவர் பற்றியும், திருக்குறள் பற்றி மக்கள் தெரிந்துள்ள அளவு என்ன என்பதைக் குறித்தும், தேர்தல் காலத்தில் காங்கிரசாரின் நாணயமற்ற—நேர்மையற்ற போக்கை விவரித்தும் சொற்பொழிவாற்றினர்.

தோழர் பாலசுந்தரம் அவர்கள் தலைமையுரையாற்றுகையில், தி மு கழகம் நடத்திய இ யில் நிறுத்தப் போராட்டம் பற்றியும், அந்தப் போராட்டம், காங்கிரசார் பொது மக்களுக்குப் பாதகம் விளைவிக்கும் வகையில் தந்திக் கம்பிகளை அறுத்தும், தபால் நிலயங்களைத் தீக்கொளுத்தியும், இரயில் தண்டவாளங்களைப் பெயர்த்தும் செய்த கொடுஞ்செயல்கள் போலல்லாமல், பொதுமக்களுக்கு எவ்விதப் பாதகமும் ஏற்படாதவகையில், தங்கள் உயிரைத் திரணமென மதித்து இரயில் தண்டவாளங்களில் தலையை வைத்து இரயிலை நிறுத்தினர் என்றும், அதுதான் தமிழனின் பண்பு என்றும் குறிப்பிட்டார்.

மேலும் அவர் பேசுகையில், ‘நாடாளும் காங்கிரஸ் சர்க்கார் இதுவரை ஏழை மக்களின் துயர் துடைக்க—தாழ்த்தப்பட்ட மக்களுக்கு நன்மை செய்ய என்னென்ன வேலைகளைச் செய்து கொடுத்திருக்கிறார்கள்’ என்றும் வினவினர்.

இறுதியில் தி. மு. கழகத் துணைப் பொதுச் செயலாளர் தோழர் என். வி. நடராசன் அவர்கள் நீண்டதோர் உரை நிகழ்த்தினார். பல்லாயிரக்கணக்கான மக்கள் திரண்டிருந்தனர்.

துணைப் பொதுச்செயலாளர் அவர்களுக்கு, திருவள்ளுவர் முத்தமிழ் கழகம், சென்னை 8-வது வட்ட தி மு. கழகம் ஆகியவை சார்பில் கைத்தறித் துண்டுகள், அணிவிக்கப்பட்டதுடன் திருவள்ளுவர் முத்தமிழ் கழகச் சார்பில் வரவேற்பு இதழும் வாசித்தளிக்கப் பட்டது.

கூட்டத் தலைவர் சி. ஆர். பாலசுந்தரம் அவர்களுக்கும், தோழர் போளூர் சுப்பிரமணியம் அவர்களுக்கும் திருவள்ளுவர் முத்தமிழ்க் கழகச் சார்பில் கைத்தறித் துண்டுகள் அணிவிக்கப்பட்டன.

★

துணைப் பொதுச் செயலாளர் என். வி. நடராசன் அவர்கள் தொடர்ந்து (அவரது பேச்சின் முதல் பகுதி நேற்றைய இதழில் வெளிவந்துள்ளது) பேசியதாவது:

‘நமது நாடு சேர, சோழ, பாண்டிய மன்னர்களால் ஆளப்பட்ட நாடு. ஒழுக்கத்தின் மேம்பாடுகளைக் கொண்டு சிறந்து விளங்கிய அருந்தமிழ் நாடு; திருவிழா பண்டிகைகளைக் கொண்டாடுவதில் கூடக் கேவலமான—வெட்கக் கேடான—அருவருக்கத் தக்க முறைகளில் ஒழுக்கங் கெட்ட ஒரு நாட்டிடமா இந்த நாட்டை ஒப்படைப்பது?

“அண்மையிலே ஒரு செய்தி—மதுரை மாதர் சங்கத்தினரின் தீர்மானம் ஒன்று நம்மைக் கவருகிறது—‘ஆண்டவனின் அருட்பெருஞ் செயலை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் அடியார் கிருபானந்த வாரிகள்,, காலட்சேபங்கள் செய்யும்போது பெண்களை இழிவாகவும், கேவலமாகவும் பேசி கையாண்டி செய்கிறார்; இதை நாங்கள் சகிக்கமாட்டோம். தாய்க்குலத்தைப் பழிக்கும் ஒருவனுக்குத் தக்க புத்தி கற்பிப்போம்’—என்று தீர்மானமொன்று மேற்கொண்டிருக்கின்றனர். அவர்கள், தி. மு. கழகத்தைச் சேர்ந்தவர்களல்லர்; அல்லது திராவிடர் இயக்கக் கருத்துக்களுக்குச் செவிமடுப்பவர்களும் அல்லர்; எந்த கிருபானந்தவாரிகளின் ‘ஆலாபனை’யை ஆவலுடன் கேட்டு ரசிப்பார்களோ அவர்களேதான்! கிருபானந்தவாரிகள் எடுத்துரைக்கும் புராணக் காதைகளை மனதார ரசித்துக் கேட்பவர்கள்தான்!

“நாங்களல்ல நாத்தீகர்கள்; நாங்கள் கடவுளை வெறுப்பவர்களுமல்ல; ஆனால், கடவுள்—மதம் ஆகியவற்றின் பெயரால் பகுத்தறிவை எந்த அளவிற்கு மக்கள் பாழ்படுத்திக்கொள்கிறார்கள் என்பதைத்தான் நாங்கள் எடுத்துரைத்து வருகிறோம்.

“கிறித்துவருக்கு ஒரே கடவுள்—இயேசு; ஒரே வேதம் பைபிள்! முகமதியருக்கு ஒரே கடவுள்—அல்லா; ஒரே வேதம் குர்ரான்! ஆனால் இந்துக்களுக்கோ?...... யாரைக் கடவுள் என்று சொல்வது? எதனை வேதம் என்று சொல்வது? அந்தக் கடவுள்களிலேயும் எத்தனை ‘பிரிவி’னர்கள்? ஏழைக் கடவுள்—முதலாளி கடவுள்—உயர்ந்த கடவுள்—தாழ்ந்த கடவுள் இவற்றிற்கெல்லாம் மேலாக, அவர்களிடையே சண்டை சச்சரவுகள்! இதுவா கடவுள் தன்மை? அவர்களின் இழிசெயல்களை வெட்கமின்றிக் கூறும் புராண ஏடுகளா வேதங்கள்?

“எனவேதான், நாம், கடவுள் துறையிலிருந்து சமுதாய, பொருளாதார. அரசியல் துறைகளிலே விளக்கம் பெற்றிருக்க வேண்டும் என்று கூறுகிறோம்.

“சமுதாயப் பிரச்சினையைப் பொறுத்தமட்டிலாயினும் நாம் ஒன்றுபட்டு—ஒருமித்த மனதுடன் நடந்துகொள்வோம். நம்மிடையே ‘தமிழன்’ ‘திராவிடன்’ என்ற உணர்ச்சி பொங்கவேண்டும்.

“நாம், வள்ளுவன் புகழை உலகம் முழுமைக்கும் தந்திருக்கிறோம்; அந்தப் பெருமை நம் தமிழகத்தையேதான் சாரும். கம்பனையும்தான் தமிழகம் தந்தது; ஆனால் அவனைப்பற்றி வேறு எவருக்கும் தெரியாது—தெரியவேண்டிய அவசியமுமில்லை;

“திருவள்ளுவர் வகுத்த நெறியோ உலகில் உள்ள எல்லா நாட்டவராலும், தங்கள் தங்கள் மொழிகளில் மொழி பெயர்க்கப் படுகிறது—காரணம் அது எல்லா துறையிலும் அப்பழுக்கின்றி நல்லனவற்றைக் கூறுதலால்! ஆனால், மகாபாரதத்திலோ, ‘கற்பு’ என்பதின் இலக்கணம் காணப்படுவதற்கு இடமே இல்லை.

“தவறான வழிகளில் அறிவைப் பாழாக்கிக்கொண்ட கயவர்கள், ‘ஐவருக்கும் தேவி — அழியாப் பத்தினி’ என்று கூறுகின்ற புராணக் கதையை உருவாக்கிவிட்டு, அதனை வாழ்க்கை நடைமுறையில் ஏற்றுக்கொள்ளச் சொன்னால் நாம் அதனை ஒத்துக்கொள்ள முடியுமா?

“சாதாரண மனிதனே தவறுகள் செய்துவிட்டால் எவ்வளவு தொல்லைகளை அவனுக்குச் சமுதாயம் கொடுக்கிறது? ஆனால், ஆண்டவன் மட்டும் அந்த ‘லீலை’களை மேற்கொள்ளுவதாகக் கூறப்படும் போது பார்த்துக் கொண்டிருப்பானேன்? ஆண்டவனின்—கண்ணனின் லீலைகளைப் படமாக எழுதி பூசை செய்வது பகுத்தறிவாகுமா? இதைக் கேட்டால் நாங்கள் நாத்தீகர்களா?

“மற்ற நாடுகளிலே நாம் பார்க்கிறோம்—அந்நாட்டு மக்கள் அறிவிலும், கல்வியிலும், தொழிலிலும் நிபுணத்துவம் அடைந்து வாழ்க்கையைச் சீர்படுத்தி சுகவாழ்வு பெறுகிறார்கள்; ஆனால், நாமோ, இன்னும் பழைய இழிநிலையிலேயே இருந்து வருகிறோம் என்றால் அதற்கான காரணம் என்ன?—அதனைத் தவிர்ப்பது எப்படி என்பதற்கான வழிவகைகளைக் காண வேண்டாமா?”

****

தலைமைக் கழகம் : அறிக்கை—27/55

தி. மு. கழக ஆண்டு விழாவும்—நாட்டுப் பிரிவினை வாரமும்

★

திராவிட முன்னேற்றக் கழகம் தோற்றங்கொண்டு, ஆறு ஆண்டுகளைக் கடந்து, ஏழாவது ஆண்டில் அடி எடுத்துவைக்கும் பெருமைகொள் விழா 17—9—55-ஆம் நாளன்று நடைபெறவிருக்கிறது.

17—9—55-ஆம் நாளிலிருந்து 23—9—55-ஆம் நாள் வரையிலுள்ள ஒரு வார காலத்தைத் திராவிட நாடு பிரிவினை வாரமாகக்கொண்டு, தி. மு. கழக ஆண்டு விழாவை மிகச் சீரிய முறையில், ஆங்காங்குள்ள தி. மு. கழகக் கிளைகளும், தி. மு. கழகத்திற்குச் சார்புடைய அமைப்புகளும் கொண்டாடுவனவாக!

தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும், கழகம் ஆற்றிய தொண்டுகளை எடுத்துக்கூறியும், திராவிட நாட்டுப் பிரிவினைத் திட்டத்தை வலியுறுத்திச் சொல்லியும் துண்டு அறிக்கைகள் வெளியிட்டு—தட்டிகள் எழுதி வைத்து—ஊர்வலங்கள் நடத்தி—பொதுக்கூட்டங்கள் கூட்டிக் கழகத் தோழர்கள் கொண்டாடுவார்களாக!

இயன்றுல் கொள்கை விளக்க இசையரங்குகளும்—நாடகங்களும் இலவசமாக நடத்திக்காட்டுவார்களாக!

“அறிவகம்,” சென்னை 27-8-1955

இரா. நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி. மு. கழகம்

****

புதுக்கோட்டையில் பொதுச்செயலாளர்

மாபெரும் வரவேற்பும், பொதுக் கூட்டமும்

28—8—55 காலை 7½ மணிக்கு, இந்தோ-சிலோன் துரித வண்டியில் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் புதுக்கோட்டை வந்தடைந்தார்.

உள்ளூர், வெளியூர் கழகத் தோழர்கள், மில் தொழிலாளர்கள், பொது மக்கள் மற்றும் பல ஆயிரக்கணக்கான மக்கள் பொதுச் செயலாளர் வண்டியைவிட்டு இறங்கியதும் வாழ்த்தொலி முழக்கினர். கழகச் சார்பிலும், மற்றும் தனிப்பட்ட தோழர்களாலும் மலர் மாலைகள் அணிவிக்கப்பட்டது. முனிசிபல் கவுன்சிலர் திரு. ஷேக் தாவூது அவர்களும் பொதுச் செயலாளருக்கு மலர் மாலைகள் சூட்டி மகிழ்ச்சியோடு வரவேற்றார். பொதுச் செயலாளர் அவர்கள் பின்னர் கழகப் பணிமனைக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

நகர சபை வரவேற்பு

மாலை 3 மணியளவில் புதுக்கோட்டை நகர சபையின் சார்பில் நகர மன்றத்தில் பொதுச் செயலாளருக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. வரவேற்புக்குப் பதிலளித்த பொதுச் செயலாளர் பேசும்போது, நகர சபைகள் எவ்வெவ்விதம் பணியாற்றவேண்டும்—எப்படிப்பட்ட உறுப்பினர்கள் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட வேண்டும்—சில நகர சபைகளில் கட்சிகளின் பெயரால் நடக்கும் கொடுமைகள் யாவை—அவை எவ்விதம் களையப்படவேண்டும் என்பது பற்றி மிக விளக்கமாகப் பேசினர்.

தேநீர் விருந்து

அன்று மாலை 4 மணிக்கு மன்னர் கல்லூரியில், பொதுச் செயலாளர் அவர்களுக்குத் தேநீர் விருந்து நடைபெற்றது. மாலை 4½ மணியளவில் பேராசிரியர் திரு. எஸ் திருநாவுக்கரசு தலைமையில் பொதுச் செயலாளர் அவர்களை வரவேற்றுப் பாராட்டுமுகத்தான் நடைபெற்ற கூட்டத்தில் பல்லாயிரக்கணக்கான மாணவர்களும், ஆசிரியத் தோழர்களும், பொது மக்களும் திரண்டிருந்தனர்.

பொதுச் செயலாளர் அவர்கள், ‘குறள் நெறி’ என்னும் தலைப்பில் அரியதோர் உரை நிகழ்த்தினர்.

மற்றையநாட்டு இலக்கியங்களுக்கும்—குறளுக்கும் உள்ள வேறுபாடுகளைச் சுட்டிக்காட்டி, திருக்குறளுக்கு ஏன் முக்கியத்துவம்—முதலிடமும் தி மு. கழகத்தார் கொடுக்கின்றனர் என்பதை விளக்கி நீண்டதோர் உரை நிகழ்த்தினர்.

துவக்கத்தில் பொதுச் செயலாளர் அவர்கட்கு, பள்ளியின் ஒவ்வொரு வகுப்பையும் சேர்ந்த மாணவர்கள் சார்பிலும், பேரவைகளின் சார்பிலும் கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அணிவிக்கப்பட்டன.

ஊர்வலம், பொதுக் கூட்டம்

பின்னர், மாலை 6 மணிக்கு; மன்னர் கல்லூரியிலிருந்து ஊர்வலம் புறப்பட்டது. பழங்கால கொம்பு, தப்பு, தாரைகளும் பாண்டு வாத்தியங்களும் முழங்க, கொடிகளை எத்திசைகளிலும் நூற்றுக்கணக்கான கழகத் தோழர்கள் முன் செல்ல, மற்றும் பல தோழர்களும் பொது மக்களும் பின்வர, பொதுச் செயலாளர் அவர்கள் திறந்த காரில் அழைத்துச் செல்லப்பட்டார். சுமார் ஒரு மைல் தூரத்திற்கு ஊர்வலம் திரண்டிருந்தது.

இறுதியில் தோன்றிய மழையையும் பொருட்படுத்தாது ஊர்வலம் கடைவீதி வழியாக பவனி வந்தது; அவரது வண்டி பல இடங்களில் நிறுத்தப்பட்டு தோழர்களால் மலர்மாலைகள் சூட்டப்பட்டது.

மாலை 7 மணிக்கு ஊர்வலம் திலகர் திடலை அடைந்ததும், தோழர் தி. மகேந்திரன் தலைமையில் பொதுக் கூட்டம் நடைபெற்றது.

பொதுச் செயலாளருக்கு வரவேற்பிதழ் வாசித்தளிக்கப்பட்டது. தனிப்பட்ட தோழர்கள் பலராலும், தொழிலாளர்கள் சார்பிலும், மற்றும் சுற்றுப்புற கிளைகளின் சார்பிலும் கைத்தறித் துண்டுகளும் வழங்கப்பட்டன.

பொதுச் செயலாளர் பேசுகையில் தி. மு. கழகத்தின் குறிக்கோள் பற்றியும், தென்னாடு தனியாக வாழவேண்டிய அவசியம் குறித்தும், தென்னாட்டைவிட சின்னஞ்சிறிய நாடுகள் பல எங்ஙனம் வாழ்கின்றன என்பது பற்றியும் விளக்கி நீண்டதோரு உரை நிகழ்த்தினர்.

கழகச் செய்திகள்

உத்தமசோழபுரம் தி.மு.க.

24—8—55 இரவு 9 மணிக்கு, தோழர் ஜி பாலகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்ற செயற் குழுக் கூட்டத்தில் கோவா அட்டூழியங்களைக் கண்டித்தும், துப்பாக்கிக் குண்டுகளுக்குப் பலியான தொண்டர்களுக்கு அனுதாபம் தெரிவித்தும், டில்லி சர்க்கார் கோவா மீது உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

பம்பாய்—பாண்டுப் தி. மு. கழகம்

25—8—55 காலை 9 மணியளவில், பாண்டுப் தி. மு கழகச் செயற்குழுக் கூட்டம் தோழர் காமஸ் தலைமையில் நடைபெற்ற போது, நவம்பர் திங்கள் 2-வது வாரத்தில் பொதுக்கூட்டம் நடத்துவதென்றும், அக்கூட்டத்தை நடத்துவதற்கு தனிக் குழு ஒன்று அமைத்தும் முடிவு செய்யப்பட்டதுடன், கோவா விடுதலைப் போரில் உயிர்நீத்த தோழர்கட்கும், தாராவி தோழர் கோதைராசன், தோழர் விசுவநாதனின் குழந்தை ஆகியோர் மறைவுக்கும் அனுதாபங்கள் தெரிவித்துக்கொள்ளப்பட்டது.

பொய்சேர்-பம்பாய் தி. மு. கழகம்

15—8—55 மாலை 6 மணிக்கு, தோழர் கே. எ. முத்தையா இல்லத்தில் தோழர் த மு. பொற்கோ தலைமையில் கிளைக் கழகத் தேர்தல் கூட்டம் நடைபெற்றபோது, தோழர் சி. இரா. அறிவிரனைச் செயலாளராகக் கொண்ட நிர்வாகக் குழுவும், பொதுக் குழுவிற்கான பிரதிநிதிகளாகத் தோழர்கள் ஆ. குணசேகரன், கே. எஸ். சுப்பையா ஆகியோரும் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

தாராவி—பம்பாய் தி. மு. கழகம்

17—8—55 இரவு சுமார் 8-30 மணியளவில், பம்பாய் தி மு. க. தாராவி கிளையின் அவசரச் செயற்குழுக் கூட்டம், திராவிடகத்தில் தோழர் எ. எல் பெருமாள் தலைமையில் நடைபெற்றபோது, நடந்த செயற்குழு கூட்ட நிகழ்ச்சிகளும், அஞ்சல் போக்குவரத்துகளும் படித்துக் காண்பிக்கப்பட்டு, ஒப்புக்கொள்ளப்பட்டதுடன், துணைச் செயலாளர், பொருளாளர் விலகல் கடிதங்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டும், மற்றும் பல முடிவுகளும் மேற்கொள்ளப்பட்டன.

50 குழந்தைகளை கொன்ற நஞ்சு கலந்த பால் பவுடர்

ஜப்பான் சர்க்கார் நடவடிக்கை

டோக்கியோ, ஆக. 31—

ஜப்பான் நாட்டில், நஞ்சு கலந்த பவுடர் பால் உட்கொண்டதினால் சுமார் 50 குழந்தைகள் இறந்து படவும், சுமார் 6,000 குழந்தைகள் நோய்வாய்ப்படவுமான நிலை ஏற்பட்டதாகச் செய்தி வந்ததல்லவா? அதை ஒட்டி, 'சந்தர்ப்பவசமான கொலை' செய்ததாக, அந்த விற்பனை நிலைய நிர்வாகியை போலீசார் கைது செய்திருக்கின்றனராம்.

மேலும், நஞ்சு கலந்த பால் பவுடர் உற்பத்தி செய்த தொழிற்சாலையை மூன்று மாதங்களுக்கு மூடிவைக்க உத்தரவிடப்பட்டிருப்பதாக சுகாதார இலாகா தெரிவித்திருக்கிறதாம்.

முன்னாள் மன்னர்களின் சொந்தச் செலவு

ஆண்டு ஒன்றுக்கு ரூ. 4 கோடி

குறைத்துக்கொள்ளக் கோரி பண்டித பந்த் கடிதம்

புதுடில்லி, ஆக. 29—

இந்தியாவெங்கணுமுள்ள மன்னர்களது சொந்தச் செலவுக்காக ஆண்டு தோறும் ரூ. 4 கோடி தரப்படுகிறது.

ஆண்டுதோறும் ஐதராபாத் நிசாம் ரூ 50 லட்சம், பரோடா ரூ. 26½ லட்சம், மைசூர் ரூ. 26 லட்சம், குவாலியர் ரூ. 24 லட்சம், ஜெய்பூர் ரூ 18 லட்சம், திரு-கொச்சி ரூ.18 லட்சம், ஜோத்பூருக்கு ரூ. 17½ லட்சம் பிகானிர் ரூ 17 லட்சம், பாட்டியாலா ரூ 17 லட்சம், இந்தூர் ரூ 15 லட்சம், போபால் ரூ. 11 லட்சம், ரேவா ரூ. 10 லட்சம்; நவநகர் ரூ 10 லட்சம், பவநகர் ரூ 10 லட்சம், மேவார் ரூ 10 லட்சம், கோல்ஹாபூர் ரூ. 10 லட்சம், கட்ச் ரூ 8 லட்சம்—இப்படியாக பல முன்னாள் மன்னர்களுக்கும் சொந்தச் செலவுகளுக்காகப் பணம் தரப்படுகிறது.

இந்தச் செலவுகளை தாங்களாகவே குறைத்துக்கொள்ளவேண்டும் என்று, பண்டித நேரு இந்த மன்னர்களுக்கு கடிதம் வரைந்திருந்தார்; ஆனால் பலன் என்னவோ 'பூஜ்ஜியம்' தானாம்!

இப்போது மீண்டும், உள்நாட்டு மந்திரி பண்டித பந்த், இவர்களுக்குக் கடிதம் எழுதி, தங்கள் செலவைக் குறைத்துக் கொள்ளுமாறு தூண்டப் போகிறாராம்!

அதாவது 'மயிலே மயிலே! இறகு போடு' என்று கேட்கப் போகிறார்களாம்!

ஒரிசாவில் 24, பீகார் 22, மத்திய பிரதேசம் 15, பஞ்சாப் 3, சென்னை 3, பம்பாய் 67, உத்தர பிரதேசம் 3, மேற்கு வங்கம் 1, பெப்சு 8, திரு-கொச்சி 2, மத்திய பாரத் 25, ராஜஸ்தான் 22, சௌராஷ்டிரா 37, இமாசலப் பிரதேசம் 30, போபால் 1, பிலாசபூர் 1, கட்ச் 1, திரிபுரா 1, மணிப்பூர் 1, விந்தியப் பிரதேசம் 24, ஐதராபாத் 1, மைசூர் 1—ஆக உள்ள இந்த எண்ணிக்கைகள் — ஆங்காங்கு, சொந்தச் செலவுக்கென ஆயிரக் கணக்கில்—லட்சக் கணக்கில் பணம் பெறும் முன்னாள் மன்னர்களின் எண்ணிக்கையாகும்!

பொதுத் தேர்தல் ஒத்திவைக்கப்படும்?

மாநில புனரமைப்புக் குழு சிபாரிசுகளின் எதிரொலி

புதுடில்லி, ஆக. 31—

மாநில புனரமைப்புக் குழு வெளியிடும் சிபாரிசுகளினால், அரசியல் சட்டம் சம்மந்தமான பிரச்சினைகள் பல, நாட்டில் எழக்கூடும் என்று கூறப்படுகிறது.

சிபாரிசுகள் அமுல் செய்யப்பட்டு மாநிலங்கள் திருத்தி அமைக்கப்படுவதானால், அதன் முதல் விளைவாக, 1957 ஜனவரியில் நடத்துவது என்று விதிக்கப்பட்டுள்ள பொதுத் தேர்தல்களை ஒத்திவைக்க வேண்டிவரும் என்று கூறப்படுகிறது.

இந்த விஷயங்கள் இன்னும் சர்க்காரின் கவனத்திற்கு வரவில்லை. குழுவின் அறிக்கைகளே, மிக தீவிரமாகவும், கவனமாகவும் பரிசீலனை செய்யப்படவேண்டும் என்று சர்க்கார் கருதுகிறதாம்.

மேலும், குழுவின் சிபாரிசுகளின் முழுவதையுமோ அல்லது பகுதியையோ அமுல் செய்வதானாலும், அரசியல் சட்ட விதிமுறைகளை சரிக்கட்டியாக வேண்டியிருக்கும் என்பதால் அதில் தாமதமேற்படக் கூடும்.

இப்போதுள்ள மாநிலங்களின் எல்லையை திருத்தியமைப்பதற்கோ, அல்லது புதியதாக ஒரு மாநிலத்தை உருவாக்குவதற்கோ மத்திய அரசாங்க சட்டம் இயற்றப்பட வேண்டும்.

மேலும், 'இதற்கான மசோதா மக்கள் சபையில் தாக்கல் செய்யப்படுமுன், மசோதாவில் குறிக்கப்படுகிற மாநில சட்டசபைகளின் அனுமதி பெற்றாகவேண்டும்,' என்று, அரசியல் சட்டத்தின் 3-வது விதி கூறுகின்றது.

இதற்கிடையில், வரும் 1957 மார்ச் முதல் மே மாதத்திற்கிடையில், திரு-கொச்சி, ஆந்திரா, பெப்சு சட்டசபைகளைத் தவிர, இதர எல்லா மாநில சட்டசபைகள், மக்கள் சபை ஆகியவற்றின் ஆயுட்காலம் முடிவடைகின்றது; மக்கள் சபையின் ஆயுட் காலத்தை நீடிக்க வேண்டுமானால், இப்போதைய நிலையில் அரசியல் சட்டத்தையே திருத்தியாக வேண்டிவரும்.

'நாட்டின் நலனுக்கு நல்லதல்ல!'

மாநில சர்க்கார்களுக்கு இந்திய சர்க்கார் சுற்றறிக்கை

புதுடில்லி, ஆக. 31—

சிறு குழந்தைகளை தேர்தல் இயக்கங்களுக்கு உபயோகிப்பது நாட்டின் நலனுக்கு உகந்தது அல்ல என மாநில சர்க்கார்களுக்கு இந்திய சர்க்கார் சுற்றறிக்கை அனுப்பியுள்ளனராம்.

கோரே மீது இராஜத் துரோகக் குற்றம்

பூனா, ஆக. 31—

கோவாவிற்குள் முதல் 'சத்தியாக்கிரக' குழுவை அழைத்துச் சென்ற என். ஜி. கோரே என்பவர்மீது போர்ச்சுகீசிய இராணுவ நீதி மன்றம், ராஜத் துரோகக் குற்றச்சாட்டைச் சுமத்தியுள்ளது என்று தெரிய வருகிறது.

நிலப்பிரபுக்கள்—விவசாயிகள் தகராறு

சென்னை, ஆக. 31—

ஸ்ரீபெரும்புதூர் தாலுகாவில் மிராசுதார்களுக்கும்—விவசாயிகளுக்குமிடையே உள்ள தகராறு பற்றி விரிவான அறிக்கை தருமாறு செங்கல்பட்டு மாவட்ட நிர்வாக அதிகாரியை சர்க்கார் கேட்டிருக்கின்றனராம்.

என்ன பேசினார்களோ?

பாட்னா, ஆக. 31—

பிரதமர் நேருவும்—ஜெயப்பிரகாஷ் நாராயணனும், பீகார் கவர்னர் மாளிகையில் சந்தித்து 80 நிமிட நேரம் பேசிக்கொண்டிருந்தனர் என்றார், என்ன பேசினர் என்பதைத் தெரிவிக்க ஜெயப்பிரகாஷ் மறுத்துவிட்டதாகவும் தெரியவருகிறது

'தென்னிந்திய மாநிலங்களின் ஒருமைப்பாடு'

'அவை ஒன்றாக இணைய வேண்டும்'

நகர சபைத் தலைவர் கருத்து

சென்னை, ஆக. 31—

"மொழிவழியாக மாநிலங்கள் துண்டு துண்டாகப் பிரிந்து போவதைக் காட்டிலும், பல வகையாலும் ஒருமைப்பாடு மிகுந்த சென்னை — மைசூர்— திரு-கொச்சி ஆகிய மூன்று மாநிலங்களும் ஒன்று சேர்ந்து 'தட்சிணப் பிரதேசம்' என்று ஒரே மாநிலமாக அமைத்துக் கொள்ளலாம்,"

என்று, மைசூர் முதன் மந்திரி அனுமந்தையாவுக்கு வரவேற்புத் தருகையில் சென்னை நகர சபைத் தலைவர் எம் வ. சிதம்பரம் குறிப்பிட்டிருக்கிறார்.

தனக்குத் தரப்பட்ட வரவேற்புக்கு பதிலளிக்கையில் முதன் மந்திரி அனுமந்தையா, 'நிர்வாக வசதிகளுக்காக இந்த மூன்று மாநிலங்களும் ஒன்றாக இணைய வேண்டும் என்று கூறினால் நான் அந்த எண்ணத்திற்குக் குறுக்கே நிற்கமாட்டேன்,' என்று தெரிவித்திருக்கிறார்.

கழகக் கூட்டம்

★

சென்னை (சேப்பாக்கம்)

பார்த்தசாரதி நாயுடு தெருவில்

2—9—55 மாலை 6 மணிக்கு

தலைவர்: நீல.நாராயணன்

பேசுவோர்:

சி. பி. சிற்றரசு

ஆர். எஸ். பாண்டியன்

மா. வே. இளங்கோ

திண்டுக்கல் நகர தி.மு.கழக தோழர்கட்கு

2—9—55 இரவு 10 மணிக்கு, திண்டுக்கல் நகர தி. மு. கழக உறுப்பினர்கள் கூட்டம், கழகப் பணிமனையில் நடைபெறும். அதுபோது ஆய்வுக்கு வருபவை: தோழர் என். வி. நடராசன் வருகை; சென்ற கூட்டத்தின் வரவு-செலவு சரிபார்த்தல்.

சொற் பயிற்சிக் கூட்டம்

2—9—55 மாலை 6 மணிக்கு, சென்னை—முத்தியாலுப்பேட்டை, சாலைவினாயகர் கோயில் தெரு, முத்தமிழ் மன்றத்தில், தோழர் கா. மு. சீனுவாசன் தலைமையில், 'விடுதலை' எனும் பொருள்பற்றி மன்றத் தோழர்கள் பலர் பேசுவர்.

திருமணம்

'நம் நாடு' அலுவலகத் தோழர் என். வி. மதிவண்ணன் சகோதரி பார் தோழியர் சரோஜா அம்மை பார்—குடியாமலைத் தோழர் இராம. சுப்பிரமணியம் திருந்திய திருமணம், 4—9—55-ல் குடியாமலையில் நடைபெறும். தோழர்கள் பலர் மணமக்களைப் பாராட்டி சிறப்புரையாற்றுவர்.

'அனுப்ப முடியுமா?'

ரஷ்யாவையும் பிரிட்டனையும் இந்தியா கேட்கிறது!

புதுடில்லி, ஆக. 31—

நிலக்கரி உற்பத்தியை 370 லட்சம் டன்னிலிருந்து 1961-க்குள் 600 லட்சம் டன்னாக உயர்த்துவதற்கு அவசியமான தொழில் நுணுக்க சாதனங்களை இந்தியாவுக்கு அனுப்ப முடியுமா என்பது குறித்து ரஷ்யாவையும், பிரிட்டனையும் இந்தியா விசாரித்து வருவதாகத் தெரிகிறது.

உற்பத்தி எல்லையை அடைவதற்கு 75 கோடி ரூபாய் முதலீடு செய்ய வேண்டியிருக்குமென மதிப்பிடப்பட்டிருக்கிறதாம்.

மாநில மாநாட்டு நிதிக்காக

சிறப்புச் சொற்பொழிவு

4—9—55 ஞாயிறு மாலை 6 மணிக்கு

சென்னை கோகலே மன்றத்தில்

பன்மொழிப் புலவர் **கா. அப்பாதுரை** எம்.ஏ., எல்.டி.,

தலைமையில்

கலைஞர் மு. கருணாநிதி

பேசுவார்

★

நன்கொடை: ரூ. 1, அணா 8

—சென்னை மாவட்ட தி. மு. கழகம்

இந்தியா லைப் & ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொசைடி லிட்.,

தலைமைக் காரியாலயம்: கோயமுத்தூர்

★

விலாச மாறுதல்

வியாபார அபிவிருத்தியின் பயனாக கட்டப்பட்டிருக்கும் எங்களது விசாலமான சொந்தக் கட்டிடத்திற்கு 4—9—55-ந் தேதி ஆபீஸ் மாற்றப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் அறிவிக்கிறோம் அதன் பிறகு கீழ்க்கண்ட விலாசத்திலிருந்து வேலை செய்துவரும்:—

இந்தியா லைப் & ஜெனரல் அஷ்யூரன்ஸ் சொசைடி,

லிமிடெடின் கட்டிடம்,

இரண்டாவது மாடி, 4/127, திருச்சி ரோடு, கோயமுத்தூர்

போன் நெ.: 187 தந்தி விலாசம்: 'இந்தியா லைப்'

'தேசியக் கொடியின் கௌரவத்தை நிலைநாட்ட இந்தியாவே அழிந்தாலும் கவலை இல்லை!'

பாட்னாவில் பண்டித நேரு பேச்சு

"தேசியக் கொடியை அவமதிப்போர் நாட்டுக்கு துரோகம் விளைவிப்போராவர்; அதற்காக அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்; தேசியக் கொடியின் கௌரவம் நிலைநாட்டப்படுவதற்காக இந்தியாவே அழிந்துபட்டாலும்கூட நான் கவலைப்பட மாட்டேன்;

"யாரும் தவறாக எண்ணிக் கொண்டிருக்கவேண்டாம்— பத்தாயிரம் அல்லது பத்து இலட்சம் பேர்கூட, தேசியக் கொடியின் கௌரவத்தை நிலைநாட்ட சாகநேரிட்டாலும் நான் கவலைப் படமாட்டேன்,"

என்று பண்டித நேரு, பாட்னாவில் நடைபெற்ற கூட்டமொன்றில் பேசுகையில் குறிப்பிட்டார்.

அசாம் மாநிலத்தில் சுற்றுப் பயணம் செய்து முடித்துவிட்டுத் திரும்பிய பண்டித நேரு விமான நிலையத்திற்கு வந்தபோது, அவரைக் காணக்கூடியிருந்த பெரும் கூட்டத்தில், சுமார் 20,000 மாணவர்கள் இடம் பெற்றிருந்தனர்.

பல பெண்கள் உட்பட அந்த மாணவர் கூட்டம் விமான நிலையம் வருமுன், நகரின்முக்கியமான வீதிகள் வழியாக ஊர்வலமாக வந்து கடந்த இருவாரங்களுக்கு முன் மாணவர் மீது துப்பாக்கிப்பிரயோகம் செய்யத் துணிந்த போலீஸ் அதிகாரிகளை தண்டிக்க வேண்டும் என்றும், நிபந்தனை எதுமின்றி கைது செய்யப்பட்டிருக்கிற மாணவர்களை விடுதலை செய்யவேண்டும் என்றும் குரல் எழுப்பினர்.

ஆனால், விமான நிலையத்தில் பண்டித நேரு வந்தடைந்தபோது, அவர்கள் அமைதியாயிருந்தனர்.

பண்டித நேரு தொடர்ந்து பேசியதாவது:—

"போலீசார் துப்பாக்கிப் பிரயோகத்தில் ஈடுபடவேண்டிய சம்பவம் ஏதேனும் நடைபெற்றிருந்தால் அது வருந்தத்தக்கது; அது விசாரிக்கப்பட வேண்டிய விஷயம்; போலீசார் குற்றவாளிகளாயிருந்தால் அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும்; நான் இந்த விஷயத்தில் ஒருதலைப்பட்சமாக நடந்து கொள்ளப் போவதில்லை; (இதைக் கேட்ட மாணவர்கள் கைதட்டி ஆரவாரம் செய்தனர்.)

"மாணவர்கள் குற்றவாளிகளாயிருந்தால் அவர்களும் தண்டிக்கப்படவேண்டியவர்களே; (இப்போது கைதட்டி ஆரவாரம் செய்யாமலிருந்த கூட்டத்தினரைப் பார்த்து 'இப்போது கையொலி எழுப்புங்களேன்,' என்று பண்டிதர் கூறியதும், கூட்டத்தினர் கையொலி எழுப்பினர்)

"ஒழுங்கான முறையில், இளைஞர்கள் நடந்துகொள்ளாவிட்டால் இந்தியாவின் எதிர்காலம் இருள் சூழ்ந்ததாக இருக்கும்," என்றும் பண்டிதர் குறிப்பிட்டிருக்கிறார்.

'தகராறு'கள் பற்றி பேச்சுவார்த்தை

இரு முதன் மந்திரிகள் சந்திப்பர்

புதுடில்லி, ஆக. 31—

சென்னை—ஆந்திரா எல்லைத்தகராறுகள் பற்றி சென்னை முதன் மந்திரி காமராசருடன் டில்லியில் பேச்சுவார்த்தை நடத்தப்போவதாக ஆந்திர முதன் மந்திரி கோபால ரெட்டி உறுதி செய்திருக்கிறார்.

இப்பிரச்சினை சம்மந்தமாக அடிப்படை வழிமுறைகள் இரு சர்க்காராலும் ஒப்புக்கொள்ளப்பட வேண்டியிருப்பதாகவும், இதுபற்றிக் கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டாலும் திட்டம் எதும் உருவாகவில்லையென்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

'செல்லாக் காசு' அல்லவாம்!

புதுடில்லி, ஆக. 31—

நிக்கல், பித்தளை இரண்டணா நாணயங்கள் 'செல்லாதவை' ஆகிவிடுமென்று டில்லி, பீகார் ஆகிய இடங்களில் பரவியுள்ள வதந்திகள் ஆதாரமற்றவை என்று மத்திய சர்க்கார் நிதி இலாகாவின் பத்திரிகைக் குறிப்புக் கூறுகிறது.

நிக்கல், பித்தளை இரண்டணா நாணயங்கள் எப்போதும்போல செல்லுபடியாகும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம். ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம், சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன். எம் ஏ.